இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 17-08-2025

# ஒரு போராட்டமும் சில குதர்க்கவாதிகளும்!

**தூய்மைப் பணியாளர்கள் சில கோரிக்கைகளை வைத்து போராட்டம் நடத்துகிறார்கள். அமைச்சர்கள் அளவிலான மாநகராட்சி நிர்வாகம் இதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்துகிறது. ஆனால் இது சுமூகமாக முடிந்துவிடக் கூடாது என்று சில குதர்க்கவாதிகள் உள்ளே புகுந்து குழப்பினார்கள்.**

சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களில் 11 மண்டலங்களில் 2020ஆம் ஆண்டு முதல் குப்பை மேலாண்மை ஆனது பொது மற்றும் தனியார் பங்களிப்பு முறைமையில் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. தற்போது மேலும் இரண்டு மண்டலங்களுக்கு விரிவாக்கம் செய்யப்படுகிறது. 11 மண்டலங்களிலும் ஏற்கனவே பணியாற்றி வந்த 4 ஆயிரத்து 994 ஊழியர்களும், அப்படியே ஈர்க்கப்பட்டு பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கான ஊதியம் முறையாக வழங்கப்பட்டு வருகிறது. உரிமைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாநகராட்சி ஊழியர்களை தனியார் ஊழியர்களாக இப்போது மாற்றவில்லை. 2013 ஆம் ஆண்டு முதலே, தூய்மைப் பணியாளர்கள் யாரும் புதிதாக நியமிக்கப்படவில்லை. தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின்கீழ், சுய உதவிக் குழுக்களின் மூலமாக, பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையிலேயே ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவர்கள் சுய உதவிக்குழுவின் ஒப்பந்த ஊழியர்கள். அதாவது, சுய உதவிக் குழுக்கள் மூலமாகப் பணியில் ஈடுபட்ட தற்காலிகப் பணியாளர்கள் இப்போது தனியார் தொழிலாளர் சட்ட விதிகளுக்கு உட்பட்டு பணியாளர்களாக ஈடுபடுத்தப்பட உள்ளார்கள்.

**நாட்டில் தனியார் நிறுவனங்கள் இருக்கின்றன. அங்கு ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பணிப்பாதுகாப்பும் இருக்கிறது. அங்கும் சங்கங்கள் இருக்கின்றன. தூய்மைப் பணியாளர்களுக்கு வருங்கால வைப்பு நிதி, மருத்துவக் காப்பீடு, போனஸ், பண்டிகைக் கால சிறப்பு உதவிகள், திருமண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, விபத்து இழப்பீட்டு உதவி, உடல் பரிசோதனைகள் ஆகியவை உண்டு. தற்செயல் விடுப்பு, ஈட்டிய விடுப்பு உண்டு. தேசிய விடுமுறை நாட்களில் பணியாற்றினால் இரட்டிப்புச் சம்பளம் ஆகியவையும் உண்டு.**

இந்த ஊதியச் சலுகைகள் குறித்து ஊழியர்களுக்கு அச்சம் ஏற்பட வேண்டிய அவசியம் இல்லை. போராட்டம் நடத்திய ஊழியர்கள், தொடர்புடைய மண்டலத்தில்கூட 1,770 ஊழியர்கள் பணியில் சேர்ந்து பணியாற்றி வருகிறார்கள். எந்தப் பணியாளரும் நீக்கப்படவும் இல்லை. பணி மறுக்கப்படவும் இல்லை. அதுகுறித்து அவர்களிடம் விளக்கம் அளித்துக் கொண்டிருக்கும் போது அரசுக்கு எதிரான சக்திகள் இதற்குள் நுழையத் தொடங்கினார்கள். 'பணியாளர்கள்' என்ற போர்வையில் இந்த சக்திகள் அளித்த பேட்டிகள், ஆட்சியைக் கொச்சைப்படுத்துவதாக அமைந்திருந்தன. வலதுசாரி நடிகைகள், பாட்டாளிப் போர்வைக்குள் நுழைந்து போராட்டத்தை ஆதரிப்பதாகக் கிளம்பியது எல்லாம் இதுவரை நடக்காதது ஆகும்.

தூய்மைப் பணியாளர்களின் பணிக்கு இப்போது எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்களுக்கு உண்மையிலேயே தற்போதுதான் நிறையச் சலுகைகளும் முறையான ஒரு அமைப்பின்கீழ் பணிபுரிவதற்கான வாய்ப்பும் கிடைக்கிறது. இதைப் புரிந்துகொள்ளாமல், 'நாங்கள் உங்களுக்கு பணி நிரந்தரம் வாங்கித் தருகிறோம்' என்று நடக்காத ஒன்றைக் கூறி அவர்களைத் திசை திருப்பி உள்நோக்கத்தோடு சிலர் சுய லாபம் அடைவதற்கான போராட்டமாக இதனை மாற்றினார்கள். நீதிமன்றத்திற்கு இந்த விவகாரம் சென்றதால், நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தும் நிலை அரசுக்கு ஏற்பட்டது.

தூய்மைப்பணியாளர்கள் நலன் காப்பதில் தி.மு.க. அரசு எப்போதும் உறுதியாக இருக்கும் அரசு ஆகும். 2007-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலகட்டத்தில்தான், தூய்மைப் பணியாளர் நலவாரியம் ஏற்படுத்தப்பட்டு, தூய்மைப் பணியாளர்களுக்கான பல்வேறு நலத் திட்டங்கள் செயல்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு உரிமைகள் தரப்பட்டு, சலுகைகள் கிடைத்தது அதன்பிறகு தான்.

14ஆம் தேதியன்று தமிழ்நாடு அமைச்சரவையில் இது தொடர்பாக முக்கியமான முடிவுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிய, அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது.

**“ தூய்மைப் பணியாளர்களுக்கு நுரையீரல் மற்றும் தோல் சம்பந்தமான நோய்களைக் கண்டறிவதற்கும், சிகிச்சை அளிப்பதற்கும் தேவையான தனித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். 5 இலட்சம் ரூபாய் அளவிற்கு காப்பீடு இலவசமாக வழங்கப்படும். சுயதொழில் தொடங்க 35 விழுக்காடு மானியம் தரப்படும். கடன் மானியத்தை ஒழுங்காகச் செலுத்துபவர்களுக்கு 6 விழுக்காடு வட்டி மானியம் வழங்கப்படும். தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு 'புதிய உயர்கல்வி உதவித் தொகைத் திட்டம்' செயல்படுத்தப்படும். 30 ஆயிரம் வீடுகள் கட்டித் தரப்படும். கிராமப் பகுதிகளில் வசிக்கும் தூய்மைப் பணியாளர்களுக்கு “கலைஞர் கனவு இல்லம்” திட்டத்தின்கீழ் இந்த வீட்டு ஒதுக்கீட்டில் முன்னுரிமை வழங்கப்படும். தூய்மைப் பணியாளர்கள் தங்களது பணியை அதிகாலையில் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில், காலை உணவு அந்தந்த உள்ளாட்சி அமைப்புக்களால் இலவசமாக வழங்கப்படும்.**

- இவை அனைத்தும் தூய்மைப் பணியாளர்கள் கோரிக்கை வைக்காமல் தமிழ்நாடு அமைச்சரவை நிறைவேற்றி இருக்கும் திட்டங்கள் ஆகும். இந்த அறிவிப்புக்கும் குதர்க்கவாதிகளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இன்னும் சொன்னால், 'இப்படி எல்லாம் சலுகைகள் பணியாளர்களுக்குக் கிடைத்துவிடக் கூடாது' என்று நினைப்பவர்கள் அவர்கள்.

மக்களின் கோரிக்கைகளை அவர்களது வீடு தேடிச் சென்று கேட்கும் அரசாக தி.மு.க. அரசு இருக்கிறது. இதற்கு யாரும் பாடம் எடுக்கத் தேவையில்லை.



சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (15.08.2025) நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் சென்னை அடையாறு, அனந்தபத்மநாப சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

## தூய்மைப் பணியாளர்கள் நலன் காக்கும் வகையில் பல்வேறு புதிய அறிவிப்புகள்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - தூய்மைப் பணியாளர்கள் சங்கத்தினர் நேரில் நன்றி!

### தாயுள்ளத்தோடு தங்களின் நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று - பல்வேறு திட்டங்களை அறிவித்த முதல்வருக்கு நன்றி தெரிவித்து மகிழ்வுக் கடிதம்!

**சென்னை, ஆக.17-**

**தூய்மைப் பணியாளர்களின் நலன் காக்கும் வகையில் பல்வேறு புதிய அறிவிப்புகளை வெளியிட்டமைக்காக தூய்மைப் பணியாளர்கள் சங்கத்தினர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.**

அதன் விவரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (15.8.2025) முகாம் அலுவலகத்தில், தூய்மைப் பணியாளர்களின் நலன் காக்க அரசு பல்வேறு புதிய அறிவிப்புகளை வெளியிட்டமைக்காக அனைத்து சங்க கூட்டமைப்பின் நிர்வாகி திருமதி பியூலா ஜான் செல்வராஜ், சென்னை மாநகராட்சி மலேரியா மற்றும் சுகாதார தொழிலாளர்கள் சங்கத்தின் நிர்வாகி பி. ஜெயசங்கர், பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து துறை தொழிலாளர் சங்கத்தின் நிர்வாகி எஸ். புருசோத்தமன், தொழிலாளர் காங்கிரஸ் டிரேட் யூனியன் நிர்வாகி ஐ. ஜெயகுமார், பெருநகர சென்னை மாநகராட்சி டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் பணியாளர் சங்கத்தின் நிர்வாகி செங்குட்டுவன், உள்ளாட்சித் துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நகராட்சி பேரூராட்சி தொழிலாளர் சங்கத்தின் நிர்வாகி ஆர். சரவணன், பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து பணியாளர்கள் முன்னேற்ற நலச் சங்கத்தின் நிர்வாகி ஜி. ராமு, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் பணியாளர் சங்கத்தின் நிர்வாகி எஸ்.அன்புதாசன், தமிழ்நாடு அனைத்து மாநகராட்சிகள் ஊழியர்கள் முன்னேற்ற சங்கத்தின் நிர்வாகி ஜி. சத்தியகுமார், துப்புரவு மேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு மேஸ்திரி சங்கத்தின் நிர்வாகி முத்து ரவிச்சந்திரன் உள்ளிட்ட பெருநகர சென்னை மாநகராட்சியின் ஊழியர் தொழிற்சங்கங்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் சந்தித்து, முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

### மூன்று ஆண்டுகளில் முப்பதாயிரம் வீடுகள்!

திராவிட மாடல் அரசு, தூய்மைப் பணியாளர்களின் நலன் காத்திடவும், அவர்களின் சமூக பொருளாதார நிலையினை உயர்த்திடவும், தூய்மைப் பணியாளர்களின் தொழில்சார் நோய்களை கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் தனித் திட்டம், பணியின் போது உயிரிழக்கும் நிலை ஏற்பட்டால் 10 இலட்சம் ரூபாய் நிதி பாதுகாப்பு, சுயதொழில் தொடங்குவதற்காக அதிகபட்சம் 3.50 இலட்சம் ரூபாய் வரை மானியம் மற்றும் கடன் தொகையை தவறாமல் திருப்பிச் செலுத்துவோருக்கு வட்டி மானியம், தூய்மைப் பணியாளர்களின் பிள்ளைகளின் உயர் கல்விக்காக “புதிய உயர் கல்வி உதவித் தொகை திட்டம்”, தூய்மைப் பணியாளர் நலவாரியத்தின் உதவியோடு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் கலைஞர் கனவு இல்லம் திட்டங்களின் கீழ், அடுத்த 3 ஆண்டுகளில் 30,000 வீடுகள் வழங்கும் வீட்டு வசதி திட்டம், பணியின் போது இலவச காலை உணவு வழங்கும் திட்டம் ஆகிய புதிய அறிவிப்புகளை 14.8.2025 அன்று வெளியிட்டுள்ளது.

தூய்மைப் பணியாளர்களின் வாழ்வு ஏற்றம் பெற்றிட, தாயுள்ளதோடு தங்களுடைய நீண்ட கால கோரிக்கைகளை ஏற்று பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்த முதலமைச்சர் அவர்களுக்கு தூய்மைப் பணியாளர் நலச்சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, தங்களது நன்றியை தெரிவித்துக் கொண்டு மகிழ்வுக் கடிதத்தினை அளித்தனர்.

இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு. மகேஷ்குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.காத்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## “என்றைக்கும் நாம் - உழைக்கும் மக்களுக்குத் துணையாக நிற்போம்!”

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!



**சென்னை, ஆக. 17-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் தம்மை இல்லத்தில், தூய்மைப் பணியாளர்கள் சந்தித்து நன்றி தெரிவித்த பின்னர் வலைதளப் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “என்றைக்கும் நாம் உழைக்கும் மக்களுக்குத் துணையாக நிற்போம்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு :-

தூய்மைப் பணியாளர்களின் பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த நிர்வாகிகளைச் சந்தித்தேன்.

நேற்று நமது அரசு வெளியிட்ட அறிவிப்புகளுக்கு மகிழ்ச்சி தெரிவித்து, மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். அவற்றையும் பரிசீலித்து நிறைவேற்றிக் கொடுப்போம்.

என்றைக்கும் நாம் உழைக்கும் மக்களுக்குத் துணையாக நிற்போம்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



சென்னை பசுமை வழிச்சாலையில், உள்ள தனது முகாம் அலுவலகத்தில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நாட்டின் 79 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசியக் கொடி ஏற்றி மரியாதை செலுத்தினார்.